<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மணியரசு | நாள் | 03.04.2025 |
| தகப்பனார் பெயர் | குருசாமி | | |

<u>வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) தாவா சந்து செல்லம்மாள் வீட்டிற்கு மேற்கு உள்ளது என்றால், வடமேற்கில் உள்ளது. என் காலி நிலத்திற்கு தெற்கில் உள்ளது என்றால், சரிதான். மாரியம்மாள் வீட்டிற்கு வடக்கில் உள்ளது என்றால், சரிதான். தென்வடல் பொதுவீதிக்கும் கிழக்கில் உள்ளது என்றால், சரிதான். தாவா சந்து 2 அடி அகலம், 15 அடி நீளம் கொண்டது என்றால், சரியல்ல. 2 அடி அகலம், 26 அடி நீளம் கொண்டது. அவ்வாறு தாவா சந்து 26 அடி நீளம் கொண்டது என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

2) தாவா சந்து என்னுடைய சொத்து அல்ல என்றால், சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் சுமார் 55 வருடமாக தாவா சந்து உள்ளது. அவ்வாறு தாவா சந்து என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்க நான் ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 மாதிரி வரைபடம் தான் தாவா சந்து குறித்து நான் தாக்கல் செய்துள்ள வரைபடம் என்றால், சரிதான். மேற்படி மாதிரி வரைபடத்தில் என்னுடைய கையெழுத்தோ, என் வழக்கறிஞர் கையெழுத்தோ இல்லை என்றால், சரிதான்.

3) இவ்வழக்கு 2019 ம் வருடத்திலிருந்து நடைபெறும் நிலையில், கடந்த 11.12.2024 ம் தேதியில் தான் மேற்படி மாதிரி வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 மாதிரி வரைபடத்தில் என்னுடைய காலி இடத்திற்கு தெற்கில் மேற்படி சந்து உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். செல்லம்மாள் வீட்டிற்கு மேற்கில் தான் மேற்படி

சந்து அமைந்துள்ளதாக அதில் காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால், மேற்படி வரைபடம் தவறானது.

4) மேற்படி வரைபடமே தவறானது எனில், மேற்படி வரைபடத்தை என் தரப்பில் நான் குறியீடு செய்யவேண்டிய அவசியம் என்னவென்றால், மேற்படி வரைபடம் தவறானது என்பதை காண்பிக்க குறியீடு செய்தேன். ஏற்கனவே மேற்படி வரைபடத்தை வாதி தன் சான்றாவணமாக குறியீடு செய்துள்ள நிலையில், எதற்காக மீண்டும் மேற்படி வரைபடத்தை சான்றிட்ட நகல் பெற்று என் தரப்பில் நான் குறியீடு செய்துள்ளேன் என்றால், மேற்படி ஆவணம் தவறானது என்பதை எடுத்துக்காட்டதான் குறியீடு செய்தேன்.

5) தற்போது என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் இந்திரா காந்தி காலனியில் 14 குடியிருப்புதாரர்களும் சேர்ந்து கூட்டாக அமைத்த பாதாள சாக்கடை தொடர்பான வரவு, செலவு பட்டியலில் என்னுடைய பெயர் இடம் பெறவில்லை என்றால், சரியல்ல. அதிலுள்ள P.G.மாணிக்கம் என்பது என்னுடைய பெயர் ஆகும். பின்னிட்டு என் பெயரை நான் 2001ம் வருடத்தில் அரசு பதிவிதழில் மணியரசு என மாற்றிக்கொண்டேன். அதற்கான ஆதாரங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால், இல்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

6) மேற்படி பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டம் நடந்தது என்பதையோ, அதில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதையோ காண்பிக்க எந்த ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வெகு நாட்கள் ஆனதால், தாக்கல் செய்யவில்லை. என் சொந்த ஊர் ஈரோடு மாவட்டம், மூலப்பாளையம் என்றால், சரிதான். நான் பிறந்தது மூலப்பாளையம், வளர்ந்தது மேட்டூரில் தான்.

7) தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் ஆணையாளர் மேட்டூர் நகராட்சி என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி நகலை அவர்கள் பெற்றுக்கொண்டார்களா என்பதற்கான ஆதாரங்கள் எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அவை நேரடியாக கொடுக்கப்பட்டவை. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணம் ஒரு கார்பன் நகல் என்றால், சரிதான். அசல் நகராட்சியில் உள்ளது. மேற்படி கார்பன் காப்பியின் பின் புறத்தில் உள்ள கையெழுத்து நேரடியாக என்னால் செய்யப்பட்டுள்ளது என்றால், இல்லை. நான் மேற்படி கையெழுத்தை அப்போதே போட்டேன். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு நான் சொல்வது போல் கார்பன் காப்பியில் கையெழுத்து செய்திருந்தால், அதன் பிரதி தான் இடம் பெற்றிருக்கும் என்றாலும், நான் சொல்வது போல் நேரடியாக கையெழுத்து செய்தது போல் இருக்காது என்றாலும், வழக்கிற்காக மேற்படி கையெழுத்தை நான் பின்னிட்டு போட்டுள்ளேன் என்றாலும், சரியல்ல.

8) என் வீட்டிற்கும், தாவா சந்திற்கும் இடையே காலி இடம் உள்ளது என்றால், சரிதான். நான் பாதாள சாக்கடை குறித்து நகராட்சியில் அளித்துள்ள மனுக்களில் என் வீட்டிற்கு பாதாள சாக்கடை இணைப்பு வேண்டும் என தான் கூறி, மனுக்கள் அளித்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி பாதாள சாக்கடை இணைப்பை தாவா சந்து வழியாக நான் கோருகிறேன் என எங்கும் சொல்லவில்லை என்றால், சரியல்ல. மேட்டூர் நகராட்சியில் மேற்படி தாவா சந்தின் வழியாக தான், நான் பாதாள சாக்கடை கோருகிறேன் என்பதற்கு ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தற்போது வரை என் வீட்டிற்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படவில்லை என்றால், சரிதான். முதலில் நான் இணைப்பு வழங்ககோரி மனு தாக்கல் செய்து, பின்னிட்டு, அதை ரத்து செய்யவும் கோரிவிட்டேன்.

9) தாவா சந்து செல்லம்மாளின் பயன்பாட்டில் இருப்பதால்தான் மேற்படி சந்தின் வழியாக எனக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படவில்லை என்றாலும், மேற்படி சந்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் அவ்வாறு மனுக்களை நான் தாக்கல்

செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. வாதி தன் வீட்டை சுற்றி நான்குபுறமும் மதில்சுவர் கட்டிவிட்டார். அதனால், மேற்படி சந்தில் அவருக்கு உரிமை இல்லை.

10) மேற்படி தாவா சந்தின் வழியாகத்தான் வாதி வீட்டிலிருந்து கழிவுநீர் குழாய் இணைப்பு செல்கிறது என்றால், சரியல்ல. என்னுடைய வீட்டின் இணைப்பு தான் செல்கிறது.

(வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.